# 10-09-2023 செய்தி

## மத்திய கிழக்கு, ஐரோப்பாவை இந்தியாவுடன் இணைக்க போக்குவரத்து

- இந்தியாவுடன் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் மிகப் பெரிய ரயில் மற்றும் கப்பல் போக்குவரத்து திட்டத்தை இந்தியா, அமெரிக்கா, சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளில் தொடங்கவுள்ளது.
- மிகப் பெரிய அடிப்படை கட்டமைப்பு திட்டமாகும். இதன் மூலம் வர்த்தகம், எரிசக்தி மற்றும் டிஜிட்டல் தகவல் தொடர்புகள் வளர்ச்சி பெறும்.
- இந்த திட்டம் உலகின் 3 பிராந்தியங்களை இணைப்பதால் செழிப்பை இணைப்பதால் செழிப்பை ஏற்படுத்தும், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் அடிப்படை கூட்டமைப்பில் உள்ள மிகப் பெரிய இடைவெளியை நிரப்பும்.
- மத்திய கிழக்கு நாடுகளில் கொந்தளிப்பான சூழல், பாதுகாப்பின்மை குறையும். பிராந்திய இணைப்பு அதிகரிக்கவும் இது உதவும்.
- இஸ்ரேல், சவுதி அரேபியா இடையே சீரான உறவு ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நாடுகள் இடையே முறையான தூதரக உறவுகள் தொடங்கிய பிறகு இஸ்ரேலும் இத்திட்டத்தில் பங்கேற்க வாய்ப்புள்ளது.

## 55 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட ஆப்பிரிக்க யூனியன் ஜி20 அமைப்பில் சேர்ப்பு

- ஜி20 அமைப்பில் ஆப்பிரிக்க யூனியன் நேற்று நிரந்தர உறுப்பினர் ஆனது. ஜி20 தொடங்கியதில் இருந்து அது, விரிவாக்கம் செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.ஜி20 கடந்த 1999 ல் தொடங்கப்பட்டது.

**ஆப்பிரிக்க கண்டம்**

- ஆப்பிரிக்க கண்டத்தில் 55 நாடுகளை உறுப்பினர்களான கொண்ட செல்வாக்குமிக்க அமைப்பாக ஆப்பிரிக்க யூனியன் உள்ளது.
- இந்த அமைப்பு 55 உறுப்பினர்களை கொண்டிருந்தாலும் ராணுவ ஆட்சியில் உள்ள 6 நாடுகள் தற்போது சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளன.
- மொத்தம் சுமார் 104 கோடி மக்களுடன் 3 டிரில்லியன் டாலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஆப்பிரிக்க யூனியன் கொண்டுள்ளது.
- உலகின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களில் 50 சதவீதமும் புதுப்பிக்கத்தக்க மற்றும் குறைந்த கார்பன் தொழில்நுட்பங்களுக்குத் தேவையான 30% தாதுப் பொருட்களையும் ஆப்பிரிக்கா கொண்டுள்ளது.

**உயிரி எரிபொருள் கூட்டமைப்பு தொடக்கம்**

- எத்தனால் உள்ளிட்ட உயிரி எரிபொருளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் சர்வதேச உயிரி எரிபொருள் கூட்டமைப்பு தொடங்கப்படுவதாக ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி அறிவித்தார்.

## 'எல்லாருக்கும் எல்லாம் மந்திரம் மாற்றும்'

- மாநாட்டைத் தொடங்கி வைத்த பிரதமர் மோடி பேசியதாவது: நாம் கூடியிருக்கும் இடத்திலிருந்து சில கி.மீ தொலைவில், 2,500 ஆண்டுகள் பழமையான அசோகர் தூண் அமைந்துள்ளது.
- அதில் பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களில், மனித குலம் எப்போதும் நலம், வளம், மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்திய மண்ணின் இந்தப் பொன்மொழியை நினைவு கூர்ந்து ஜி-20 உச்சி மாநாட்டைத் தொடங்குகிறோம்.

SURESH

**சர்வதேச சவால்கள்**

- உலகப் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு.
- வடக்கு, தெற்கு நாடுகளிடையே பிளவு.
- கிழக்கு, மேற்கு நாடுகளிடையே இடைவெளி
- உணவு தானியம், எரிபொருள், உரம், தீவிரவாதம்
- சைபர் பாதுகாப்பு
- சுகாதாரம், எரிச்சக்தி, தண்ணீர் சார்ந்த பல்வேறு சர்வதேசப் பிரச்சினைகள் மற்றும் சவால்கள்.
- ஜி-20 அமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியத்தை இணைக்க இந்தியா பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையை ஜ-20 உறுப்பு நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டன.

**டெல்லி பிரகடனம்**

- பூமியில் அமைதியை நிலைநாட்ட வேண்டும்.
- ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டும்.
- உலகப் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்த வேண்டும்.
- சர்வதேச டிஜிட்டல் கரன்சி குறித்து ஆலோசிக்க வேண்டும்.
- கடல்சார் வணிகத்தை மேம்படுத்த வேண்டும்.
- கடல் வளத்தைப் பாதுகாக்க வேண்டும்
- சர்வதேச அளவில் ஊழல்களை ஒழிக்க வேண்டும்.
- உலக நாடுகளில் பசி, பட்டினி, ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்க வேண்டும்.
- உணவு தானியங்கள், எரிசக்தி தட்டுப்பாட்டைப் போக்க வேண்டும்.
- சர்வதேச சுகாதாரக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும்.
- கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும்.
- சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பசுமைத் திட்டங்களை அமல்படுத்த வேண்டும்.
- பருவநிலை மாறுபாட்டை தடுக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.
- பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிக்க வேண்டும்.
- பேரிடல் தடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.
- செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும்.
- பாலில சமநிலை, பெண்கள் முன்னேற்றத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- சர்வதேச தீவிரவாதத்துக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- தீவிரவாத அமைப்புக்கு நிதியுதவி கிடைப்பதை தடுக்க வேண்டும்.
- ஒன்றுப்பட்ட உலகத்தை உருவாக்க வேண்டும்

என்பன உள்ளிட்ட அம்சங்கள் டெல்லி பிரகடனத்தில் இடம்பெற்றுள்ளன.

**உலக நாடுகளுக்கு வானிலை தகவல்களை வழங்க இந்தியாவின் சார்பில் ஜி20 செயற்கைக்கோள்**

- ♦ உலக மக்களின் நலன் கருதி இந்தியாவின் சார்பில் ஜி20 சுற்றுச்சூழல், பருவநிலை செயற்கைக்கோள் கண்காணிப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.
- ♦ இந்த செயற்கைக்கோள் திட்டத்தின் மூலம் பருவநிலை, வானிலை தொடர்பான தகவலகள் உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.
- ♦ இந்தியாவின் முயற்சியால் உலகம் முழுவதும் இந்த ஆண்டு, சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாப்படுகிறது.
- ♦ சுற்றுச்சூழலை பாதுகாக்க, ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின்சாரம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

SURESH' IAS ACADEMY ★ RESEARCH & DEVELOPMENT
வெற்றியின் முகவரி SINCE 2006 SURESH' IAS ACADEMY
ARISE AWAKE ACHIEVE